RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# கொங்கு வட்டார நாவல்களில் வாழ்வியல் கூறுகள்

த. செல்லம்மாள் [அ, *]

[அ] தமிழ்த்துறை, சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் - 636005, இந்தியா

# Life-Oriented Thoughts in Iniyavai Narpathu and Inna Narpathu

**T. Sellammal [a, *]**

[a] Department of Tamil, Sona College of Arts and Science, Salem-636005, India

* Corresponding Author: sellammalraj51@gmail.com

**ABSTRACT**

Among all living beings, human beings possess a unique capacity for rational thinking, analysis, and critical understanding, which distinguishes them from other forms of life. This ability has enabled humanity to progress and flourish. Human beings are not merely born to exist but also strive to lead meaningful and fulfilling lives. The world provides abundant resources to support human existence, and through the application of knowledge, individuals have learned to live in harmony with their emotions and circumstances. Emotions play a vital role in shaping human behavior and influencing personal and social life. Although intellectual development varies from one individual to another, literature reveals that the emotional nature of human beings has remained fundamentally similar across different periods of history. While the causes of emotions and the ways in which they are expressed may differ among individuals, the emotions themselves are universal and common to all humanity. In this context, Inna Narpathu and Iniyavai Narpathu, two ethical works belonging to the post-Sangam period, offer profound insights into human values and principles of righteous living. This article examines the life-oriented thoughts and ethical teachings presented in these two classical Tamil texts, highlighting their enduring relevance to human conduct and moral philosophy.

**Keywords:** Inna Narpathu, Iniyavai Narpathu, post-Sangam period, Classical Tamil texts

## முன்னுரை

உலகில் பிறந்த எல்லா உயிரினங்களையும் விட மனிதன் மேம்பட்டவன், எதையும் பகுத்து ஆய்ந்து அறியும் பண்பு மனிதனுக்கு மட்டுமே அதிகம் உண்டு. எனவே தான் மனிதன் வளர்ச்சி பெற்ற நிலையில் இருக்கின்றான். மனிதன் வாழப்பிறந்தவன் மட்டுமல்ல, வாழவும் விரும்புகின்றவன். அவனுக்கு வேண்டிய எல்லா வளமும் இவ்வுலகில் நிறைந்துள்ளன. அறிவை பயன்படுத்தி உணர்ச்சிகளின் தன்மைகளுக்கு ஏற்ப வாழ பழகிக் கொண்டான். உணர்ச்சிகளே மனிதனை ஆட்டிப்படைக்கும் சக்தியாக விளங்குகின்றன என்பதை அறியலாம். அறிவின் வளர்ச்சியில் மாறுபட்டிருக்கும் மனிதன் உணர்ச்சி நிலையில் ஏறக்குறைய எல்லா காலத்திலும் ஒரே தன்மை உடையவனாக இருந்திருக்கிறான் என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. உணர்ச்சியின் காரணங்களும் அவற்றை எய்தும் முறைகளும் மனிதனுக்கு மனிதன் வேறுபட்டு இருக்கலாம். ஆனால் அவை எல்லா காலத்திற்கும் எல்லா மனிதருக்கும் பொதுவாக உள்ளன என்பதை உணரலாம். சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய இன்னா நாற்பது, இனியவை நாற்பதில் உள்ள வாழ்வியல் சிந்தனைகளை பின்வரும் தலைப்புகளில் காணலாம்.

## இன்பமும் துன்பமும் கலந்தது வாழ்க்கை

"நிலம் தீ நீர் வளி விசும்போடைந்தும்

கலந்த மயக்கம் உலகம்" (தொல்-3 - 19)

எனும் தொல்காப்பிய நூற்பா ஐம்பூதமும் கலந்ததே உலகம். அதுபோல மனித வாழ்க்கையில் இன்பமும், துன்பமும் கலந்ததே வாழ்க்கை எனும் கருத்தை சுட்டுகின்றது. விதிக்கும், மதிக்கும் இடையில் போராட்டத்துடனே மனிதன் வாழ்ந்து கொண்டு இருக்கின்றான். இன்பம் இருக்கும் போது அந்த இன்பத்திற்கு தானே காரணம் எனக் கூறி மகிழும் மனிதன் துன்பம் வந்தால் அதற்கு விதி தான் காரணம் என்று கூறி, பழியை விதியின் மீது போட்டுவிட்டு தற்காலிகமாக தப்பித்துக் கொள்கிறான். சிந்தித்துப் பார்த்தால் நமக்கு வரும் நன்மை, தீமைகளுக்கு நாமே காரணம் என்பதை,

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்**

**தீதும் நன்றும் பிறர் தர வாரா"** **(புறநானூறு-192)**

என்று புறநானூற்றுப் பாடல் வரிகளால் நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. இனிப்பு கசப்பு, இன்பம் துன்பம், மேடு பள்ளம், இளமை முதுமை இவை நிரம்ப கலந்ததே வாழ்க்கை. அந்த வாழ்க்கையை எவ்விதம் அமைத்துக் கொண்டால் நன்று என்பதை காட்டுவதே இலக்கியத்தின் பண்பாகும். அந்த வகையில் "இன்னா நாற்பதும், இனியவை நாற்பதும்" மனித வாழ்க்கையின் நெறிமுறைகளை வகுத்துத் தந்துள்ளன. அவற்றில் சிலவற்றையாவது பின்பற்றி நடந்தால் வாழ்க்கைச் சோலையில் என்றும் நறுமணம் தவழ்ந்து கொண்டே இருக்கும்.

## மன்னனின் பண்பு நலன்கள்

எது நல்ல நாடு என்ற கேள்வி நம்மிடையே எழும். ஆனால் பொருளாதாரத்தில் வளமையுடன் உள்ள நாடு நல்ல நாடு என்றும், தொழில் வளத்தில் சிறந்து விளங்கும் நாடே நல்ல நாடு என்றும், படை வலிமையிலும், ஒழுக்க நெறியிலும் உயர்ந்த நாடே நல்ல நாடு என்றும் பலர் பலவிதமாகப் பதில் கூறுவர். ஆனால் ஔவையாரோ,

"எவ்வழி நல்லவர் ஆடவர்

அவ்வழி நல்லை வாழிய நிலனே" (புறநானூறு - 187)

என்று கூறுவது நாட்டை ஆளும் மன்னன் இனிய பண்பு உள்ளவனாக இருக்க வேண்டும் என்பதை எடுத்து இயம்புகிறது இதனையே வள்ளுவரும்,

"முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு

இறையென்று வைக்கப் படும்" (திருக்குறள் - 388)

என்ற குறளில் தெளிவுபடுத்தியுள்ளார்.

மாறாக,

"குடிபுர வுண்டுங் கொடுங்கோலஞ்சி

மன்பதை காக்கும் ஒண் குடிப் பிறத்தல்

துன்பமல்லது தொழுதக வில்லென" (சிலம்பு - காட்சிக்காதை)

எனும் சிலம்பின் வரிகள் கொடுங்கோலனாக இருந்தால் அவன் கீழ் வாழும் குடிகள் துன்புற்றே வாழ்ந்து கொண்டிருப்பர். இருள் நிறைந்த பாதையைக் கடக்க வேண்டின் கையில் ஒளிவிளக்குத் தேவை. அறியாமையைக் கடந்து செல்ல அறிஞர்களின் துணைதேவை. பிறவியாகியப் பெருங்கடலை நீந்த வேண்டுமானால் இறைவனின் கருணை தேவை. அதுபோலவே நீண்டு நீர் பரப்பைக் கடக்கவேண்டுமானால் தெப்பம் தேவை, இதை உணர்ந்து செயல்படுவது அவசியம். அதோடு எப்போதும் இன் முகத்துடன் இனிய சொற்கள் கூறிப் பழகும் பண்புடையாளன் தொடர்பு என்றும் இன்பத்தைத் தரும்.

## இன்னா நாற்பது காட்டும் வாழ்வியல் கூறுகள்:

கொடுங்கோல் மன்னன் கீழ் வாழ்தலும், நெடுநீரைப் பினையின்றி நீந்த முயல்வதும், கடுமொழி பேசுவதும் என்றும் துன்பத்தையே தரும். இதனை இன்னா நாற்பது,

"கொடுங்கோல் மற மன்னர் கீழ் வாழ்தல் இன்னா

நெடுநீர் புணையின்றி நீந்துதல் இன்னா

கடுமொழியாளர் தொடர்பின்னா இன்னா

தடுமாறி வாழ்தல் உயிர்க்கு"

என்ற பாடல் வரிகள் நன்கு உணர்த்துகின்றது.

ஒரு நாட்டில் வாழும் மக்கள் இன்பமுடன் வாழவும், இனிதே உறங்கவும் காவல் அவசியம். நாட்டின் எல்லையில் கண்ணிமைக்காமல் வீரர்கள் காவல் காப்பதால் தான் மக்கள் எல்லோரும் அமைதியுடன் வாழ முடிகின்றது. பகை நாடு பக்கத்தில் இருப்பின் ஒரு நாட்டிற்கு எந்நேரமும் அச்சம் தொடர்ந்து கொண்டே இருக்கும். அந்நிலையில் நாட்டை ஆளும் மன்னனும் போர் மறவர்களும் நன்கு போர்க்கலையில்; சிறந்து விளங்கியவராய் இருத்தல் வேண்டும். இதனையே வள்ளுவர்,

"அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும்

எஞ்சாமை வேந்தர்க்கு இயல்" (திருக்குறள் 382)

எனும் குறள்வழி அச்சமின்மை,ஈகை, அறிவு, ஊக்கம் இந்த நான்கு குணங்களும் மன்னனுக்கு இருப்பது அவசியம் என்பதை வலியுறுத்துகின்றார். மேலும்,

"வினை வலியும் தன் வலியும் மாற்றான் வலியும்

துணை வலியும் தூக்கிச் செயல்" (திருக்குறள் 471)

என்றவள்ளுவரின் குறலும் தான் மேற்கொள்ளும் செயலின் வலிமை, மாற்றானின் வலிமை, தன் துணை வருபவனின் வலிமை இவைகளை நன்கு ஆய்ந்து உணர்ந்து இருந்தால் தான் எதிலும் வெற்றி பெற முடியும், தன் வலிமை இல்லாவிடில் அவன் கையில் பிடித்த ஆயுதம் அவனுக்கே துன்பமாய் அமைந்துவிடும் என்பதை உறுதிப்படுத்துகின்றது. அதனால்தான் பாரதி"வலிமையற்ற தோளினாய் போ போ போ " என்று பாடினார்.

மலர் என்றால் நாற்றமிக்கதாய் இருக்க வேண்டும். அம்மலரையேஎல்லோரும் விரும்புவர். மணம் இல்லாத மலரை வண்டுகள் கூட மொய்ப்பதில்லை. வெறும் அழகான மலர் கண்ணிற்கு இன்பம் தரலாம் மனதிற்கு அது துன்பத்தையே தரும். மனிதன் மணம் வீசும் மலராய் எல்லோரும் விரும்பக்கூடிய வகையில் வாழ வேண்டும். அவ்வாறு வாழா விடில் அவ்வாழ்வு துன்பம் நிறைந்ததாகவே இருக்கும். எந்த ஒரு காரியத்தைச் செய்யும் முன்பும் அக் காரியத்தின் நன்மை, தீமைகளை உணர்ந்து அதன்பின் அக் காரியத்தில் ஈடுபட்டால் அது இன்பமான முடிவைத் தரும். அவ்வாறு எண்ணாது அக் காரியத்தில் ஈடுபட்டால் அது முடிவில் துன்பத்தையே தரும். இதனை,

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்

எண்ணுவம் என்பது இழுக்கு. (திருக்குறள் - 467)

என்று வள்ளுவரின் வாய்மொழியால் உணரலாம். அதுபோலவே சொல்லின் கூறுபாட்டை ஒருவன் நன்கு புரிந்து கொண்டு பேசுதல் அவசியம். அவ்வாறு பேசாவிடில் அதுவே அவனுக்குத் துன்பம் தரும் இதனையே இன்னா நாற்பது,

"ஆற்றல் இலா தான் பிடித்த படை யின்னா

நாற்றம் இலாத மலரின் அழகின்னா

தேற்றம் இல்லாதவன் துணிவின்னா ஆங்கின்னா

மாற்றம் அறியான் உரை. (இன்னா நாற்பது - பாடல் -7)

என்ற பாடல் உணர்த்துகின்றது.

புதுமையை விரும்புவதிலும் வெளி மயக்கில் விழுந்து விட்டிலைப் போல் அழிவதிலும் இந்தியருக்கு இணையாக எவரையுமே கூற முடியாது என்றார். பகவான் ராமகிருஷ்ண பரமஹம்சர். ஒரு மனிதனின் உயர்ந்த பண்பு நலமே அவன் இந்தச் சமுதாயத்தால் மதிக்கப்படுவதற்குக் காரணமாக இருக்கின்றது. எனவே எவன் ஒருவன் ஐம்புலனையும் அடக்கி ஒழுங்குடன் வாழ்கின்றானோ அவனையேச் இந்தச் சமுதாயம் மதிக்கும் -போற்றும் இல்லையே மிதிக்கும் - தூற்றும். எனவே புலனடக்கம் அவசியமாகின்றது. அவ்வாறு இல்லாவிடில் அது அவனுக்குத் துன்பத்தையே தரும். இதனை வள்ளுவப் பெருந்தகை,

“ஒருமையில் ஆமை போல் ஐந்தடக்கல் ஆற்றின்

எழுமையும் ஏமாப் புடைத்து " (திருக்குறள் - 126)

எனும் குறள்வழி விளக்குகின்றார்.

எந்த ஒரு செயலில் ஈடுபட்டு வெற்றிக்காண வேண்டும் என மனிதன் நினைக்கின்றானோ, அதற்கு அவன் கடுமையான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அப்போதே அவனால் மகிழ்ச்சி பெற முடியும் இல்லையெனில் துன்பமே வந்து சேரும். அத்துடன் மட்டுமல்லாது பிறர் பொருளைக் கவர்ந்து விட நினைப்பதும் துன்பத்தைத் தரும். நல்லோர் அவைக்கண் அடக்கமின்றிக் கூறும் சொற்களால் துன்பம் வந்து சேரும். இதனை" முயற்சி திருவினையாக்கும்”, “உள்ளத்தால் உள்ளலும் தீதோ" என்ற வள்ளுவர் வாய்மொழியாலும், அறிவது அறிந்து அடங்கி அஞ்சுவது அஞ்சி என்ற நாலடியார் பாடல் வாயிலாகவும் அறியலாம். இதனையே பின்வரும் இன்னா நாற்பது பாடலும் உணர்த்துகின்றது.

"அடக்கம் உடையவன் மீளிமை இன்னா

துடக்கம் இல்லாதவன் தற் செருக்கு இன்னா

அடைக்கலம் வவ்வுதல் இன்னா ஆங்கின்னா

அடக்க அடங்காதார் சொல்" (இன்னா நாற்பது -40)

## இனியவை நாற்பது காட்டும் வாழ்வியல் கூறுகள்

இவ்வுலகம் இனியது இதிலுள்ள வான் இனிமையுடைத்து காற்றும் இனியது என்பதை,

“தீ இனிது நீர் இனிது நிலம் இனியது.

ஞாயிறு நன்று திங்களும் நன்று

வானத்துச் சுடர்களெல்லாம்; மிக இனியது

மழை இனியது மின்னல் இனிது இடி இனிது

கடல் இனிது மலை இனிது காடு இனிது

ஆறுகள் இனியன

உலோகமும் மரமும் செடியும் கொடியும்

மலரும் காயும் கனியும் இனியன பறவைகள்

இனிய ஊர்வனவும் நல்லன

விலங்குகள் எல்லாம் இனியவை

நீர்வாழ்வனவும் நல்லன

மனிதர் மிகவும் இனியர்

ஆண் ஒன்று பெண் இனிது

குழந்தை இன்பம்

இளமை இனிது முதுமை நன்று

உயர் நன்று சாதல் இனிது"

மேலும்,

‘‘குழுவி பிணியின்றி வாழ்தல் இனிதே

கழறும் அவையஞ்சான் கல்வி இனிதே

மயர்க வல்லராய் மாண்புடையார்ச் சேரும்

திருவந்தீர் வின்றேல் இனிது" (இனியவை நாற்பது - 12)

என்ற பாடலில் குழந்தைகள் நோயில்லாது வாழ்தல்இனிதாகும். பேசுதற்குரிய சபையை அறிந்து அதற்கேற்ப பேசும் அவை அஞ்சாதவனின் கல்வியானது இனிதாகும். மயக்கம் உடையவர் அல்லாதவராய் மாட்சியமை உடையராய் சேரும் செல்வமும் அவரை விட்டு நீங்காதாயின் இனிதாகும் என்கிறார்.

## முடிவுரை

ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட இனியவை நாற்பதும், இன்னா நாற்பதும் எனும் இலக்கியங்கள் மனித வாழ்வியலுக்குப் பல அரிய கருத்துக்களை எடுத்து இயம்புகின்றன. சில பாடல்களை மட்டுமே ஆய்வுக்குள் கொண்டு வந்த போதும் அவை நீண்ட செறிவான செய்திகளை உள்ளடக்கியுள்ளதை உணர முடிகிறது. அதை நடைமுறை வாழ்வில் செயல்படுத்தினால் இன்னல் நீங்கி என்றும் இனிமை நிறைந்திருக்கும் என்பதை இந் நூல்கள் வழி நாம் அறிய முடிகின்றது

## References


திருக்குறள் - பரிமேலழகர் உரை

சிலப்பதிகாரம் - புலியூர் கேசிகன் உரை

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் - வர்த்தமானன் பதிப்பகம்

புறநானூறு - மூலமும் உரையும்

சங்க மருவிய இலக்கியம்.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License